# மஞ்சளின் விலை விவசாயிகளை மகிழ்விக்கும்

இந்தியாவில், 2014-15ல் மஞ்சள் 0.18 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 0.83 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு, ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் நாட்டின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் 85 சதவீதம் பங்களிக்கிறது. ஐக்கிய அரபு நாடுகள், பங்களாதேஷ், மலேசியா, ஈரான், ஐக்கிய அரசு நாடுகள் மற்றும் அமெரிக்காவிற்கு

இந்தியாவிலிருந்து மஞ்சள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2014-15ல் மஞ்சள் 0.03 மில்லியன் எக்டரில் 0.1 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ஈரோடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணமலை ஆகியவை மஞ்சள் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

மஞ்சள் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களான தெலுங்கானா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் ஜூலை – ஆகஸ்டு மாதங்களில் மழை குறைந்தால் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு குறைந்தது. அதனால் தமிழ்நாட்டு மஞ்சளுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. தற்போது பவானி, சத்தியமங்கலம் மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளான உள்சூர், இராமபுரத்திலிருந்து புது மஞ்சள் வர துவங்கியுள்ளது. ஈரோடு சந்தையில் நல்ல தரமான மஞ்சள் தற்போது குவிண்டாலுக்கு ரூ.10,500க்கு விற்கப்படுகிறது. சேலம் இரகத்திற்கு அதிக முன்னுரிமை மற்றும் நல்ல விலை கிடைக்கிறது. நீண்ட, மொத்தமான மற்றும் எளிதாக உடைய கூடிய மஞ்சள் தரமானதாக கருதப்படுகிறது.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 19 ஆண்டுகளாக ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மஞ்சள் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

தற்போது உள்ள சூழலில் நல்ல தரமான மஞ்சளின் பண்ணை விலை மார்ச் - ஏப்ரல், 2016ல் குவிண்டாலுக்கு ரூ.10,500 – ரூ.11,500 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் மஞ்சளை சேமித்து விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405


**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள்
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் 0422-6611284
தொலைநகல் - 0422-2430781
மின்அஞ்சல் spices@tnau.ac.in